1982 மார்ச் 4] [திரு. கா. கோபாலகிருஷ்ணன்]

அடுத்து, அமையப் போகின்ற புது மாவட்டத்தைப் பற்றி ஒருசில வார்த்தைகள் சொல்ல ஆசைப்படுகிறேன். மதுரையிலே இருந்து புது மாவட்டத்தைப் பிரிக்கின்றபோது, பெரியகுளம் தாலூகா, கொடைக்கானல் தாலூகா, உத்தமபாளையம் தாலூகா, வேடசந்தூர் தாலூகா, பழனி தாலூகா ஆகிய தாலூக்காக்களை உள்ளடக்கிய ஒரு புது மாவட்டம் ஒன்று அமைக்கப் பட இருக்கிறது. அந்த மாவட்டத்திற்கு மையப் பகுதியாக பெரியகுளம் இருப்பதால், அங்கே தலைநகரத்தை ஏற்படுத்த வேண்டும், பெரியகுளத்தை தலைநகராகக் கொண்ட அந்த புதிய மாவட்டத்தை ஏற்படுத்த வேண்டும் என்று கேட்டுக்கொண்டு, வாய்ப்பளித்தமைக்கு நன்றி கூறி விடை பெறு கிறேன். நன்றி. வணக்கம்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: பேரவையின் இன்றைய அலுவல்கள் இத்துடன் முடிவுற்று, நாளை 5—3—1982 ஆம் தேதி காலை 9-00 மணிக்குப் பேரவை மீண்டும் கூடும். நாளை மாலையிலும் சபை கூடும்.

பின்னர் பேரவை பிற்பகல் 1.46 மணிக்கு ஒத்தி வைக்கப் பெற்றது.

9. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்.

அ. சட்டப்படிக்கான விதிகளும், ஆணைகளும்.

113. 23—5—1981 ஆம் தேதியிடப்பெற்ற மதுவிலக்கு—ஆயத்தீர்வைத் துறையின் எஸ்.ஆர்.ஓ.—எ. 159(எப்)/81 ஆம் எண் அறிவிக்கையுடன் வெளி யான, தமிழ்நாடு 1981 ஆம் ஆண்டு இந்தியாவில் தயாரிக்கப்பெற்ற அயல் நாட்டு சாராவிகள் (உற்பத்தி செய்தல்) விதிகளில் சில திருத்தங்கள் செய்வது குறித்து 12—6—1981 ஆம் தேதியிடப் பெற்ற மதுவிலக்கு—ஆயத்தீர்வைத் துறையின் 56 ஆம் எண் அரசாணையில் வெளியான அறிவிப்பு [தமிழ்நாடு 1937 ஆம் ஆண்டு மதுவிலக்குச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 10/1937) 54 (3) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப் பெற்றது.]

114. 29—4—1981 ஆம் தேதியிடப் பெற்ற வணிக-வரிகள்-சமய அறக் கட்டளைகள் துறையின் /வ.வ & ச.அ./239(பி)/81 ஆம் எண் அறி விக்கையில் சில திருத்தங்கள் செய்வது குறித்து 18—11—1981 ஆம் தேதி யிடப்பெற்ற வணிகவரிகள் சமய அறக்கட்டளைகள் துறையின் 1282 ஆம் எண் அரசாணையில் வெளியான அறிவிப்பு [தமிழ்நாடு 1959 ஆம் ஆண்டு பொது விற்பனை வரிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 1/1959) 53(5) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப் பெற்றது].

115. தமிழ்நாடு 1981ஆம் ஆண்டு சாராய விதிகளில் (உற்பத்தி செய்தல்) சில திருத்தங்கள் செய்வது குறித்து 6—7—1981 ஆம் ஆண்டு மதுவிலக்கு—ஆயத்தீர்வைத் துறையின் 94ஆம் எண் அரசாணையில் வெளியான அறிவிப்பு [தமிழ்நாடு 1937 ஆம் ஆண்டு மதுவிலக்குச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 10/1937) 54 (3) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப் பெற்றது].

116. தமிழ்நாடு 1940 ஆம் ஆண்டு மோட்டார் வாகனங்கள் விதிகளில் சில திருத்தங்கள் செய்வது குறித்து 4—8—1981 ஆம் தேதியிடப் பெற்ற உள் துறையின் 1834 ஆம் எண் அரசாணையில் வெளியான அறிவிப்பு [தமிழ்நாடு **1939** ஆம் ஆண்டு மோட்டார் வண்டிகள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 4/1939) 133 (3) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப் பெற்றது.]

ஆ. அறிக்கைகள், அறிவிப்புகள், ஏனைய தாள்கள்.

62. தமிழ்நாடு 1982ஆம் ஆண்டு பொதுச் சொத்து (அழித்தல், இழப்பு ஆகியவற்றைத் தடுத்தல்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை **சட்டமுன் வடிவு எண் 13/1982**).

வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS
TAMIL NADU LEGISLATURE LIBRARY
20 DEC 1982
MADRAS-600 009